புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

===========================================================================

# கிறிஸ்தாயனம் வெளிப்படுத்தும் தமிழ் பண்பாட்டு மரபாக்கம்

===========================================================================

**ஆய்வாளர்**
*சுஜிதா ரா*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*பதிவு எண்: 20113164022032*
*தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)*
*நாகர்கோவில்-629004*

**நெறியாளர்**
*முனைவர் எட்வின் எழில் அரசி*
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)*
*நாகர்கோவில் – 629004*
(kNdhdķk z ąk; Re;judhH gy;f i y f;fof , i z T ngwŋJ)

===========================================================================

**ஆய்வுச் சுருக்கம்**

*மரபு ஒரு நிலையான இடத்தை பெற்றுள்ளது. மனிதன் ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு சென்று வரும் போது தன்னுடைய பழைய நாட்டின் தொடர்பை மறந்து விடுவதில்லை. பழைய வாழ்க்கை முறையை அந்த நாட்டில் செயல்படுத்த முற்படுகின்றான். அவ்வாறு செயல்படுத்துகின்றபோது புதிய நாட்டின் சூழ்நிலைக்கேற்ப சிறிது மாற்றத்தை மேற்கொள்ளுகின்றான். சிறிது மாற்றத்தை மேற்கொள்ளுகின்றானே அல்லாமல் அவனுடைய வாழ்க்கை முறையில் பழைய நாட்டின் நினைவும், வாழ்வியல் முறையும் இருத்தலைத்தான் "மரபு" என்று சான்றோர்கள் கூறியுள்ளனர். ஓர் இனம் என்று இருந்தால் அதற்கு என ஒரு மரபும் காணப்படும். பண்பாடு நாட்டிற்கு ஏற்ப மாறுபடும். ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு கலாச்சாரங்களை பின்பற்றுகின்றனர். அத்தகைய பண்பாட்டு தன்மை நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பண்பாடும் நாளடைவில் வளர்ச்சி பெற்று வரும். சில பண்பாடுகள் வீழ்ச்சி அடையும். தமிழ் பண்பாடானது காலத்தால் அழியாதது. மனிதனின் சூழல்களை பண்பாடு எடுத்துரைக்கின்றது. மனிதனானவன் தான் வாழ்கின்ற சூழலில் பல்வேறு கொள்கைகளை கடைபிடித்து வாழ்கின்றான். தன்னுடைய முன்னோர்கள் கடைபிடித்த செயல்களை தானும் கடைபிடிக்கிறான். தன்னுடைய அடுத்த தலைமுறையினராலும் கடைபிடிக்கப்படுகிறது. தலைமுறை தலைமுறையாக பண்பாடு சூழலுக்கு ஏற்றவாறு சில மாற்றங்களைப் பெறுகிறது. சில பண்பாடு வளர்ச்சி அடைந்தும், சில பண்பாடு தேய்ந்தும் அமைகிறது. பண்பட்ட சமுதாயத்தை பண்பாடு உடையவர்கள் சீரமைக்கும் போது நல்ல சிறப்பான பண்பாடு வலுவவடைகிறது. மனிதனுடைய உணர்வுகள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், செயல்பாடுகள் போன்றவைதான் ஒரு சமூகத்தின் பண்பாட்டினை நிர்ணயிக்கிறது. பண்பட்ட*

*மனதினை உடைய ஒவ்வொரு தனிமனிதனும் சிறந்த சமூகத்தை உருவாக்குகின்றான். கிறிஸ்தாயனம் வெளிப்படுத்தும் பண்பாட்டு செய்திகளில் உபசரிப்பு, நன்றியுணர்வு என்ற தன்மைகள் இன்று குறைந்துள்ளதை உணர முடிகின்றது. உபசரிப்பு தன்மை வெறும் வாய்வார்த்தையாகவே உள்ளது. நன்றியுணர்வும் வெறும் வெற்று தன்மை உடையதாகவே அமைகின்றது. மக்களின் உணவு, உடை, பிள்ளைபேற்று நிகழ்வு போன்றவை பண்பாட்டின் வளர்ச்சி தன்மையை உணர வைக்கின்றது. மனித உலகின் வளர்ச்சியோடு பன்பாட்டு கலாச்சாரங்களின் வளர்ச்சியையும் இதன் மூலம் அறிய முடிகிறது. பண்பை உணரவைக்கின்ற பண்பாடும், பழமையை உணர்த்துகின்ற மரபும் ஒன்றையொன்று தொடர்பு கொண்டு காணப்படுதலால் இவை பண்பாட்டு மரபு என்று பகிர்ந்து கொள்ளலாம். மேலும் மரபு குறித்த செய்திகளும் உணரவல்லதாய் இக்கட்டுரையில் காணப்படுகின்றது. பண்பாட்டு மரபின் வளர்ச்சி நிலை ஒவ்வொரு தலைப்பிலும் அறிய முடிகிறது .*

***முன்னுரை***

*ஒவ்வொரு நாட்டிலும் பண்பாடு, மரபு என்பது நிலையான இடத்தை பெற்றிருக்கிறது. மக்களின் வாழ்க்கை முறைகளை வகுத்துரைப்பது பண்பாடாகும். அதன் பழமையை கூறுவது மரபாகும். அவ்வாறு கிறிஸ்தாயனம் எனும் கிறிஸ்தவ காப்பியமானது வெளிப்படுத்தியுள்ள மக்களின் கலாச்சாரமான உணவு, உடை பிள்ளைபேறு, உபசரித்தல், நன்றியுணர்வு போன்ற செய்திகளை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.*

***மரபு விளக்கம்***

*மக்களால் வழிவழியாக பின்பற்றப்பட்டு வரும் வாழ்க்கை முறையும், நாகரீகமும் காலப்போக்கில் பழமையாய் அமைகின்றது. அந்த பழமையைத்தான் ‘மரபு’ என்று குறிப்பிடுகின்றோம். ‘மரபு’ என்பது ஒவ்வொரு மொழியார்க்கும், ஒவ்வொரு நாட்டார்க்கும் உண்டு. ஆனால், எல்லாருடைய மரபும் ஒரே நிலையில் இரா. நிறைந்த வேறுபாடுகளும் அளவில் ஏற்றத்தாழ்வுகளும் இருத்தல் கூடும். ஒரு மொழி என்றிருந்தால் அதற்கு மரபு இருந்தேயாகும். ஓர் இனம் என்றிருந்தால் அதற்கும் மரபு இருந்தே யாகும்” (தமிழர் மரபியல், ப.13) என்று தமிழர் மரபியல் எனும் நூல் கூறுகின்றது.*

***தொல்காப்பியமும் மரபும்***

*மரபியல் என்ற தனிப்பகுதியை இன்றும் காணப்படுகின்ற பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. தொல்காப்பியத்தில் வகுத்து கூறப்பட்டுள்ள மரபியல் செய்திகள், பிற பழந்தமிழ் நூல்களில் பல காணப்படுகின்றது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் மரபியல் என்ற இயலில், செய்யுட்கு உரிய மரபாக,*

***”மரபு நிலை திரிதல் செய்யுட் கில்லை***
***மரபு வழிப் பட்ட சொல்லி னான”***

*(தொல். பொருள். பா.636)*

*வழக்கில் மரபு நிலையானது திரிதல் அச்செய்யுட்கு இல்லை என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.*

***பிள்ளைப் பேறு***

*தாய் என்பவள் ஒரு குழந்தையை பத்துமாதம் தன்னுடைய வயிற்றில் சுமக்கிறாள். பின்பு குழந்தை பிறப்பது என்பது இன்றைய காலக்கட்டங்களில் எல்லா தாய்மார்களுக்கும் மருத்துவமனைகளிலேயே நடக்கிறது. அங்கு தாய், சேய் இருவருக்கும் சிகிட்சை அளிக்கப்படுகிறது. ஆனால் அன்றைய காலக்கட்டங்களில் குழந்தை பிறத்தலானது வீடுகளிலேயே நிகழும். பிள்ளைப்பேறு நிகழும் இடம் குறித்து வெளிக்கொணரும் போது ’’கணவனின் வீட்டில் வைத்தும், பெண்ணின் தாயார் வீட்டில் வைத்தும் பிள்ளைப்பேறு நிகழலாம். ஆனால் பெரும்பாலும் தாய்வீட்டில் வைத்தே பிள்ளைப்பேறு நடைபெறுகிறது. கர்ப்பமான பெண்ணை ஆறு அல்லது ஏழாவது மாதம் அழைத்துச் சென்று பெண்ணின் தாயார் வீட்டில் கணவர் விடுவார்’’ (முதுவர் இனப் பழங்குடிகள், ப.92) என முதுவர் இனப் பழங்குடிகள் எனும் நூல் பிள்ளைப்பேறு முன் காலத்தில் வீடுகளில் நடைபெற்றிருக்கிறது*

*என்பதை கூறுகின்றது. பிள்ளைப்பேறு குறித்து கிறிஸ்தாயனம் எனும் நூல் கூறும்போது,*

***"ஓர்ந்துடன் யோசேப்பில்லா ளொடு நசரேத்தினின்று***
***பேர்ந்து தம்பெயரைத்தீட்ட பெத்துலேகேம் தாவீதூர்***
***சேர்ந்துநல் வசதியற்று திகைத்தொருமடத்தில் தங்க***
***சோர்ந்தனை முதற்பேறான சுதனை யங்கீன்றாள் மாதோ"***

*(கிறிஸ், ப.44)*

*என்னும் அடிகளில் பிள்ளைப்பேறானது வீட்டில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சியை சுட்டி நிற்கின்றது.*

**உணவு**

*மக்களின் உயிர் வாழ்க்கைக்கு உணவே அடிப்படைத் தேவையாக உள்ளது. "உணவு இல்லையேல் ஜகத்தை அழித்திடுவோம்" என்கிறார் பாரதி. ஒரு சமூகத்தினுடைய பண்பாட்டில் உணவுப் பொருள்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்களின் வாழ்வியலில் அவர்கள் பயன்படுத்துகின்ற உணவுப் பொருள்களைக் கொண்டே அவர்களின் வாழ்க்கைத்தரம் எப்படிப்பட்டது என்பதை அறிய முடியும். உணவின் முக்கியத்துவத்தை சங்ககால மக்களின் வழியாக அறிய முடிகிறது . உழவர் குலப் பெண்கள் கைக்குத்தல் அரிசியை சோறாக்கி அதனோடு வயலில் பிடித்த நண்டும் கொல்லையில் காய்த்த பீர்க்கங்காயையும் சேர்த்து சமைத்து உண்டார்கள் என்பதை,*

***'அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு***
***சுவைத்தாள் அவலன் கலவை யொடு"***

*(சிறுபாணாற்றுப்படை, ப. 194, 195)*

*எனும் சிறுபாணாற்றுப்படை வரிகள் சுட்டுகின்றது.*

***அப்பம், மீன்***

*கிறிஸ்தாயனம் எனும் காப்பியத்தில் உணவு வகை கூறப்பட்டுள்ளது. அப்பம், மீன் ஆகியவை அக்காலத்தில் உணவாக இருந்தது என்பதை,*

***"நேரதாயவர் நீர் இயம்பும், உம்***
***சாரப்பங்களெத் தனையுண்டென்றதற்***
***கோரைந் தப்பமீன் இரண்டிங் குண்டவை***
***யாருக்கார்க்கென அமைப்பம் என்றனர்"***

*(கிறிஸ்.ப.88)*

*இன்று சோற்றை உணவாக கொண்டு அதனோடு மீனை சாப்பிடுவது போன்று முன் காலத்தில் அப்பத்தையும் அதனோடு மீனையும் உணவாக உட்கொண்டுள்ளனர்.*

*பரதவர்கள் கடலில் பிடித்த இறால் மீன்களையும், வயலில் உள்ள ஆமையின் இறைச்சியையும் சுட்டு தின்றனர் என்பதை,*

***"கடல் இறவின் சூடு தின்றும்***
***வயல் அமைப் புழுக்கு உண்டும்"***

*(பட்டினப்பாலை, பா.64-65)*

*என்னும் வரிகள் பட்டினப்பாலையில் அமையப்பெற்றுள்ள உணவுகள் குறித்து உணர்த்துகின்றது.*

***பொரித்த மீன், தேன்***

*விவிலிய காலத்தில் உள்ள மக்கள் பொரித்த மீன்களும் அதனுடன் தேனையும் சேர்த்து உண்டனர் என்பதை,*

***"பொரித்தமீ னதினொடு பொருந்து தேனையும்***
***திரத்துடன் ஈந்திட ஜோசப் போததை***
***உரத்தினில் சமுசய முற்ற சீஷர் முன்***
***கரத்தினில் எடுத்தவர் காண உண்டனர்'***

*(கிறிஸ், ப. 156)*

*என்பது கிறிஸ்தாயனம் எனும் நூலில் காணப்பெறுகின்றது.*

***நன்றியுணர்வு***

*நன்றியுணர்வு ஒருவனிடம் இருந்தால் சுற்றமும் அவனை நினைக்கும். நன்றியுணர்வோடு இருக்கும் போதுதான் மனம் பக்குவப்பட்ட நிலையில் பணிவோடும் தெளிவோடும் இருக்கும். நன்றியுணர்வு தான் என்ற அகந்தை நீங்கிய நிலையில் நாம் என்ற எண்ணங்கள் தெளிந்த நிரூற்றாக ஊற்றெடுக்கத் தொடங்குகிறது. 'நன்றி மறப்பது நன்றன்று' என்கிறார் வள்ளுவர். சலுகைகளைப் பெற்ற ஒருவர் மற்றொருவருக்கு நன்றி தெரிவிக்கும் பண்பே நன்றி உணர்வாகும். நாம் பிறரிடமிருந்து பெறுகின்ற சின்னஞ்சிறு பணிவிடைகள், நம்மை நன்றியுணர்வு உள்ளவர்களாக மாற்றுகின்றது. குறள் நன்றியுணர்வு குறித்து கூறுகின்றது.*

***"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு"***

*(குறள். 110)*

*ஒருவன் செய்த உதவியை மறந்த நன்றியுணர்வு இல்லாதவனுக்கு பாவத்திலிருந்து தப்பும் வழி இல்லை என்று வள்ளுவம் கூறுகிறது. கிறிஸ்தாயனம் நூலிலும் நன்றியுணர்வு புலப்படுத்தப்பட்டுள்ளது.*

***"நேர்ந்தவர் ஆசிரியருக்கு நீருமைக்காட்டிடுக என்ன, நேரதாக***
***பேர்ந்து செலும் வழியிலவர் பெற்றனர் நற்சுகம், அவரில் பிரீதியாகச்***
***சார்ந்த சுகநீதனையுணர்ந்த சமரியன்தான் நன்றியொடுதான் திரும்பிச்***
***சேர்ந்தவர்தாளதில் வீழ்ந்து தொண்டனிட்டு மாதுதிகள் செலுத்தினானே"***

*(கிறிஸ், ப.109)*

*இவ்வரிகளில் நற்சுகம் பெற்ற பலரில் ஒருவன் மட்டுமே நன்றியுணர்வுடன் கடவுளுக்கு நன்றியை செலுத்துகின்றான். பத்து பேர் குணம் அடைந்ததில் ஒருவன் மட்டும் நன்றியுணர்வுடன் காணப்பட்டான். மற்றவர்கள் நன்றியுணர்வை காட்டவில்லை. உலகில் இப்பொழுதும் மனிதர்கள் இதைப்போன்றுதான் இருக்கிறார்கள். ஒன்றோ இரண்டோ என கை காட்டுகின்ற எண்ணிக்கையில் நன்றியுணர்வு உள்ளவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் அந்த நன்றியை உடனே மறந்து விடுகிறார்கள்.*

***உபசரித்தல்***

*வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களை வரவேற்று விருந்து படைத்து உபசரித்தல் தமிழர் பண்பாடாகும். நாள்தோறும் தன்னை நோக்கி வருகின்ற விருந்தினரைப் பேணி காப்பவனது இல்வாழ்க்கையானது வறுமையடைவதில்லை என்பதை வள்ளுவர்,*

***"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***
***பருவந்து பாழ்படுதல் இன்று"***

*(குறள் 83)*

*என வெளிப்படுத்துகின்றார் . திருவிவிலியம் உபசரித்தல் குறித்து புலப்படுத்தும்போது, "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" (1 பேதுரு. 4:9) என்று கூறுகின்றது. கிறிஸ்தாயனம் நூலில் மரியாளின் உபசரிப்பு முறை பேசப்படுகிறது.*

***"அங்கவனுக்குடன் பிறந்த மரியா ளென்ற***
***அரிவைமிக உரிமையதாய் அகம்பூரித்து***
***துங்கமுறும் விலையுயர்ந்த நருதென்கின்ற***
***சுகந்த வாசனை கமழுந் தைலந்தன்னை***
***செங்கையிலே எடுத்தவரின் சிரசில் வார்த்துத்***
***திருவடிகள் மேலும் அதைச் செவ்வாய்ப்பூசி***
***சங்கையுடன் தலைமுடியால் தொடைக்க அந்தத்***
***தலமுழுதும் பரிமளத்தால் ததும்பிற்றன்றே"***

*(கிறிஸ்,ப.112)*

இங்கு மரியாள் என்பவள் பரிமளத்தைலம் பூசி உபசரிப்பு செய்கின்ற செயல் கூறப்பட்டுள்ளது. இன்றும் சிலர் உபசரிப்பில் பன்னீர், சந்தனம் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். உபசரிப்பானது மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருவதாய் அமைகிறது.

**உடைகள் :**

'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்' என்ற பழமொழியானது ஆடையின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்கிறது. சங்க கால நூல்களில் ஒன்றான புறநானூறு 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்கிறது. முன்பு மக்களிடம் அதிகமான ஆடைகள் கிடையாது. ஒன்று, இரண்டு ஆடைகளே வைத்திருப்பர். இக்காலத்தில்தான் ஒவ்வொரு மனிதனும் அதிக ஆடைகளை பயன்படுத்துகிறான். ''ஆடை அணிவதில் ஒரு வர்க்கப் போராட்டம் காணப்பட்டுள்ளது. திருவிதாங்கூரில் ஆரியரின் ஆதிக்கம் மேலோங்கியபோது பெண்களின் ஆடை குறித்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன'' (சார்லஸ் மீட் ஐயர், ப.39) என சார்லஸ் மீட் ஐயர் நூல் குறிப்பிடுகிறது. முன்பு ஆடை அணிவதிலும் ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டுள்ளன. இன்று உடைகளுக்கு பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன. புதியமுறையில் பல வகையான மாடல்களில் உடைகளை தைக்கின்றனர். ஆனால் முன்பு இவ்வாறு வளர்ச்சி பெறவில்லை. கிறிஸ்தாயனம் நூலில் உடைகள் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளது.

**''பினும்கிறிஸ்தோர் உவமைதனைப் பேசலுற்றார் சீஷருடன் பிரீதியாக**
**தனமிகுத்தோன் ஒருவனிரத் தாம்பரமும் மெலிதுடையும் தரித்தோனாக''**
*(கிறிஸ், ப.105)*

இரத்தாம்பரமும், மெலிதான உடையும் பயன்படுத்தியுள்ள செய்தி ஐசுவரியவானையும் இலாசருவையும் குறித்த உவமை எனும் தலைப்பில் அமைந்துள்ளது. இரத்தாம்பரம், மெலிதுடையை முன்பு பயன்படுத்தியுள்ளமை இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

''கலையை உரிந்தே தங்களுக் காகப் பகிர்ந்தனர் பின்
நிலையங்கி தை யலிலாமலே நெசவுற்றிருந்ததினால்
உலையா தெவனேனும் அதை உறப்பீலியிட் டனரே'' (கிறிஸ், ப.145)

நிலையங்கி எனும் உடை முன்பு இருந்துள்ளது. அந்த உடை தையல் இல்லாமல் நெசவு செய்யப்பட்டுள்ளது எனும் செய்தி அறிய முடிகிறது.

**முடிவுரை**

பழமையை உணர்த்துகின்ற மரபு குறித்து இலக்கியங்கள் பேசுகின்றன. அவை இன்றைய கால மனிதனை பழைய மனித நிலையை நினைக்க வைக்கின்றது, பேச வைக்கிறது. இலக்கியங்கள் காட்டும் பழமை உணர்வு மனித உணர்வை விரிவடைய செய்கின்றது. மரபு என்பது குறித்த செய்திகளும் இலக்கண நூலான தொல்காபபியம் மரபு குறித்து கூறியுள்ள செய்திகளும் இக்கட்டுரையில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் பண்பாட்டை வலியுறுத்தும் மக்களின் கலாச்சாரங்களும், இன்றைக்கு கலாச்சாரங்கள் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளன என்பது குறித்த செய்திகளும் அடங்கிய பகுதியாக இக்கட்டுரை அமைகின்றது.

**அடிக்குறிப்புகள்**


1. புலவர் செந்துறைமுத்து, தமிழர் மரபியல், பசவேஸ்வரா பிரசுரம், தவுலதாபாத், கிருஷ்ணகிரி, சேலம் மாவட்டம்.
2. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை – 600014, முதற்பதிப்பு- மே 2005.
3. ஜான்பால்மர், கிறிஸ்தாயனம், ஆசியவியல் நிறுவனம் சென்னை-600 119, முதற் பதிப்பு 1865
4. இரா.மோகன், பத்துப்பாட்டு முதற்பகுதி (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098, முதற்பதிப்பு – ஏப்ரல் 2004

5. *அ. மாணிக்கம், திருக்குறள் தெளிவுரை, தென்றல் நிலையம், 12பி மேலசன்னதி, சிதம்பரம்-608001, முதற்பதிப்பு – ஏப்ரல் 1999.*

6. *ஜி. ஐசக் அருள்தாஸ், சார்லஸ் மீட் ஐயர், கிப்ற்றோ,தெங்கம்புதூர், கன்னியாகுமரி மாவட்டம், முதற்பதிப்பு செப்டம்பர் 2019*

7. *சு. இராஜேந்திரன், முதுவர் இனப்பழங்குடிகள், சேகர் பதிப்பகம் 66, பெரியார் தெரு, எம்.ஜி. ஆர் நகர், சென்னை- 600 078*

8. *பரிசுத்த வேதாகமம், இந்திய வேதாகமச் சங்கம் 2006 மகாத்மா காந்தி சாலை, பெங்களூர்-560 001.*